தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032

தொலைபேசி 044-22201337

மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in

இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்.08/மா/2025

நாள் 12.06.2025

C. நாராயணன் --- முறையீட்டு மனுதாரர்
மதுரை

உதவி ஆணையர் --- எதிர் மனுதாரர்
மண்டலம் 1
மதுரை மாநகராட்சி

மதுரை, K. புதூர், கற்பக நகர், 10வது தெரு, எண் 259 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.C.நாராயணன் என்பவரின் 30.08.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.09.2024 அன்று பெறப்பட்டு, 08/மா/2025, என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

மதுரை, K.புதூர், கற்பக நகர், 10வது தெரு, எண் 259 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.C.நாராயணன் என்பவர் தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"மதுரை மாநகராட்சி பழைய மண்டலம் எண்.2 புதிய மண்டலம் 1, பழைய வார்டு எண்.4, புதிய வார்டு எண்.10, கற்பக நகர் 10வது தெரு, பிளாட் எண்.259, கட்டிடத்திற்கு வரைபட அனுமதி எண்.NE4/01580/08, உரிமை ஆணை எண்.8108 நாள் 21.02.2008ன் பிரகாரம் வரைபட அனுமதி பெற்று கட்டப்பட்ட கட்டிடத்திற்கு 01.04.2010 முதல் ரூ.1498/—லிருந்து ரூ 13888/— என வரி விதிப்பு எண்.343047ன் பிரகாரம் மண்டலம் "A" பிரிவில் வரி விதிப்பு செய்யப்பட்டது. மேற்கண்ட வரிவிதிப்பை ஆட்சேபித்து 07.09.2010ல் சீராய்வு மனு சமர்ப்பித்தேன். என்னுடைய சீராய்வு மனுவின் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்காத நிலையில் 01.04.2022ல் நடத்தப்பட்ட பொது சீராய்வில் ரூ.13888/—லிருந்து ரூ.27776/—என 100% வரி உயர்வு செய்து சீராய்வு அறிவிக்கை சார்பு செய்யப்பட்டது. சீராய்வு அறிவிக்கையை ஆட்சேபித்து 17.07.2022ல் எதிர் மனுதாரர்களிடம் சீராய்வு மனு சமர்ப்பித்தேன். சீராய்வு மனுவின் மீது நடவடிக்கை எடுக்காததால் 24.04.2023ல் பதிவுத் தபாலில் சமர்ப்பிக்கப்பட்ட மனுவில் ஏற்கனவே 01.04.2010 மற்றும் 01.04.2022 ஆகிய காலங்களில் விதிக்கப்பட்ட வரி விதிப்பை ஆட்சேபித்து சமர்ப்பிக்கப்பட்ட சீராய்வு மனுக்களின் மீது நடவடிக்கை எடுக்கும்படி பதிவுத் தபாலில் மனு சமர்ப்பித்தேன். இன்று

வரை, என் மனுவின் மீது நடவடிக்கை எடுக்காததால் மதுரை மாநகராட்சி சொத்துவரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் மேல் முறையீட்டு வழக்கை சமர்ப்பித்தேன்.

01.04.2008 பொது சீராய்வில் திருத்தப்பட்ட மாத வாடகை மற்றும் தெருக்குறியீடுகள் சம்பந்தமாக 1971ம் வருடத்திய மதுரை மாநகராட்சி சட்டப்பிரிவு 118–ன் பிரகாரம் மதுரை மாவட்ட அரசிதழில் பிரசுரிக்கப்படாததால் 01.04.2010–ல் விதிக்கப்பட்ட வரி சட்டப்படி செல்லத்தக்கதல்ல.

01.04.2008க்கு முன் கற்பக நகர் 10வது தெரு, குடியிருப்பு பகுதி (R2) என இருந்ததை 01.04.2008 பொது சீராய்வில் முதன்மை வணிக பகுதி என "A" மாற்றம் செய்ததற்கு எந்தவித விளக்கமோ, முகாந்திரமோ தெரிவிக்கப்படவில்லை.

01.04.2022 பொது சீராய்வில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை எண்.53, நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/R1, நாள் 01.04.2022ன் பிரகாரம் பொது சீராய்வு நடத்துவதற்கு மாமன்ற தீர்மானம் எண்.10, நாள் 12.04.2022ன் பிரகாரம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 13.04.2022ம் தேதி நாளிதழ்களில் சொத்து வரி திருத்த அறிக்கை வெளியிடப்பட்டது. அதன் பிரகாரம் 01.04.2022ல் பொது சீராய்வில் என்னுடைய கட்டிடத்திற்கு கட்டிடக் கழிவு வழங்கப்படவில்லை.

01.04.2010 முதல் ரூ.13,888/–ன் பிரகாரம் வரி செலுத்தியிருக்கிறேன். மேலும் 01.04.2022 பொது சீராய்வில் விதிக்கப்பட்ட வரி ரூ.27776/– பிரகாரம் 2022–2023 முதல் மற்றும் 2வது ஆகிய 2 அரையாண்டுகளுக்கும் வரி செலுத்திய ஜெராக்ஸ் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

ஆகவே, மனுவை கனிவுடனும் கருணையுடனும் பரிசீலனை செய்து, 01.04.2010ல் முதன்மை வணிக பகுதி என மண்டலம் "A" விகிதத்தில் வரி விதிப்பு செய்திருப்பதை குடியிருப்பு பகுதி மண்டலம் "C" விகிதத்தில் மாற்றம் செய்தும் 01.04.2022 பொது சீராய்வில் அரசாணை மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக சுற்றறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் பொது சீராய்வு நடத்துவதாக மாமன்ற தீர்மானம் எண்.10 நாள் 12.04.2022ன் பிரகாரம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்டையில் 10% கட்டிட கழிவு வழங்கியும் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமாய் பணிவுடன் பிராத்திக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 13.01.2025 நாளிட்ட அறிவிக்கை மூலம் மதுரை மாநகராட்சி மண்டலம் 1–ன் உதவி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. மதுரை மாநகராட்சி, மண்டலம் 1 (கிழக்கு)–ன் உதவி ஆணையர் தனது 19.02.2025 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் ஒரே சீரான வரி விதிப்பை மேற்கொள்ள அரசால் வழி வகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி மதுரை மாநகராட்சி உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைக்குட்பட்ட பகுதியில் உருவாக்கப்பட்ட அடிப்படை வசதிகள் மற்றும் கட்டமைப்புகளுக்கு ஏற்றவாறு மதுரை மாநகராட்சி பகுதிகள் சொத்து வரி விதிப்பிற்காக மண்டலம் A, B மற்றும் C என வகைப்படுத்தப்பட்டுள்ளது என்கிற விபரம் நடுவத்திற்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட உட்கட்டமைப்புபடி நடுவ புகார் மனுதாரர் திரு.C.நாராயணன் அவர்களது வீடு அமைந்துள்ள மதுரை K.புதூர், கற்பக நகர் 10வது தெரு, மண்டலம் "A" வகைப்பாட்டில் உள்ள இடத்தில் உள்ளது. புகார் மனுதாரர் வீடு மட்டுமல்லாது அப்பகுதி முழுவதும் "A" மண்டலத்தில் உள்ளது. அப்பகுதியில் உள்ள அனைத்து வரி

விதிப்புகளுக்கும் "A" மண்டல வகைப்பாட்டின்படி சொத்து வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது.

"A" மண்டலப் பகுதிக்குள் இப்புகார் மனுதாரர் வீட்டினை அமைத்துக்கொண்டு "C" வகைப்பாட்டில் இப்புகார்தாரரின் சொத்து வரியை சேர்க்க தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் புகார் அளிப்பதற்கு எவ்வித அடிப்படையும் நியாயமும் இல்லை என நடுவத்திற்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் இப்புகார்தாரர் மாநகராட்சி "A" மண்டல வகைப்பாடு இடத்தில் குடியிருந்து கொண்டு சொத்து வரி விதிப்பை வேறு வகைப்பாட்டிற்கு மாற்ற கோருவதற்கு மாநகராட்சியில் கோரிக்கை விடுத்த மனுவில் புகார்தாரர் தரப்பில் எவ்வித முகாந்திரமும் இல்லாததால் இப்புகார் மனுதாரர் மாநகராட்சியில் ஏற்கனவே அளித்த மனுவின் மீது நடவடிக்கை இல்லை என்ற விபரம் நடுவத்திற்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் இப்புகார் மனுதாரரின் சொத்துவரி விதிப்புக்குரிய கட்டிட அளவுகள் பின்வருமாறு குடியிருப்பு உபயோகத்தில் உள்ளது.

தரைதளம்	:	1799 சதுர அடி
முதல் தளம்	:	1675 சதுர அடி
இரண்டாம் தளம்	:	371 சதுர அடி
மொத்தம்	:	3845 சதுர அடி ஆக உள்ளது

===========

தற்போது தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் சொத்துவரி பொது சீராய்வு அரசாணை எண்.53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA(IV) துறை நாள் 30.03.2022ன் வழி காட்டுதல்கள்படி மேற்கொள்ளப்பட்டு சொத்துவரி உயர்வு செய்ய அரசு அறிவுறுத்தியவாறு அனைத்து வரி விதிப்புகளுக்கும், Property Tax Increase Factor அடிப்படையில் சொத்து வரி நிர்ணயிக்கப்படுகிறது. அவ்வாறே இப்புகார் மனுதாரரின் வரிவிதிப்புக்குரிய கட்டிட பரப்பளவு மேற்குறிப்பிட்ட 3845 சதுரடி Property Tax Increase Factor 2 என்ற அடிப்படையில் 01.04.2022 முதல் சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கது. (அரசாணை எண்.53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA(IV) துறை நாள் 30.03.2022ன் நகல் இணைக்கப்பட்டுள்ளது.) மேலும், இப்புகார் மனுதாரர் கோரிய கட்டிடத்திற்கான 10% கழிவுகள் குறித்து மேற்படி அரசாணையில் ஏதும் குறிப்பிடாததால் மனுதாரரது கட்டிடத்திற்கு 10% கழிவுகள் அனுமதிக்கப்படவில்லை. அதே சமயம் வேறு வரி விதிப்புகளுக்கும் 10% கழிவுகள் வழங்கப்படவில்லை என்ற விவரம் நடுவத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது. இப்புகார் மனுதாரர் தரப்பில் மனுதாரரது கட்டிடத்திற்கான சொத்துவரி விதிப்பினை மண்டலம் "A" லிருந்து வேறு பிரிவு வகைப்பாட்டிற்கு மாறுதல் செய்திட சட்டப்படிக்கு வழிவகை இல்லை என்ற விபரம் நடுவத்திற்கு அறிக்கையாக சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 29.04.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 23.04.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் மற்றும் அவரது சார்பாக திரு. A. சபபாலமுருகன் ஆகியோர் 29.04.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

1) மதுரை மாநகராட்சி முந்தைய மண்டலம் II தற்போதைய மண்டலம் 1 முந்தைய வார்டு 4, நடப்பு வார்டு 10, கற்பக விநாயகர் தெரு, பிளாட் எண் 259ல் அமைந்துள்ள மனைக்கான காலிமனை வரி அதாவது VST ரூ.1,498/– ஐ முறையாக செலுத்தி வந்துள்ளேன்.

2) பின்னர் அந்த இடத்தில் கட்டிடம் மதுரை மாநகராட்சியில் முறையாக விண்ணப்பித்து வரைபட அனுமதி எண்.NE4/01580/2008, உரிமை ஆணை எண்.8108, நாள் 21.02.2008–ன் பிரகாரம் வரைபட அனுமதி பெற்று கடந்த 2009–ல் கட்டிடம் கட்டி முடித்தேன். அக்கட்டிடத்தின் ஆரம்பகால சொத்து வரி விதிப்பு எண் 343047க்கு பின்னர் வரி விதிப்பு எண்.115/343047க்கு நடப்பு வரி விதிப்பு எண்.115/010/905793 ஆகும். மேற்படி கட்டிடம் சொந்த குடியிருப்பு உபயோக பயன்பாட்டு வகையை சேர்ந்தது.

3) எனது கட்டிடம் தரை தளம் 1799 சதுரடிகள் முதல் தளம் 1,675 சதுரடிகள் மற்றும் இரண்டாம் தளம் 371 சதுரடிகள் ஆக மொத்தம் 3,845 சதுரடிகள் கொண்டது. கடந்த 2009–க்குப் பிறகு மேற்படி கட்டிடத்தில் நான் எந்த கூடுதல் கட்டிடமோ, இணைப்போ ஏதும் கட்டவில்லை.

4) கடந்த 09.07.2010ல் முதன்முதலாக எனது கட்டிடத்திற்கு ஒரு அரையாண்டு சொத்து வரியாக மதுரை மாநகராட்சியால் கடந்த 01.04.2010 முதல் ரூ 13,888/– என நிர்ணயிக்கப்பட்டது. அச்சமயம் எனது கட்டிடம் அமைந்துள்ள பகுதியின் தெருக்குறியீடு குடியிருப்புப்பகுதி R2 என இருந்தது. ஆனால் அதனடிப்படையில் வரி நிர்ணயம் செய்யாமல் முதன்மை வணிக பகுதி A என்ற அடிப்படையில் வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி என் கட்டிடத்திற்கு முதன் முறையாக வரி விதித்த கணக்கீடே தவறாகும். காரணம் என்னவென்றால் எனது கட்டிடம் அமைந்துள்ள பகுதி முதன்மை வணிகப் பகுதி "A" என்பதற்கான எந்த அடிப்படை காரணமும் இல்லை. வரியை அதிகமாக விதிக்க வேண்டும் என்பதற்காகவே, மதுரை மாநகராட்சி சட்டத்தை மீறி குடியிருப்புப் பகுதி "R2" என இருந்ததை தன்னிச்சையாக மாற்றி முதன்மை வணிகப்பகுதி "A" என அதிகாரிகளே முடிவு செய்து அதன்படி வரி விதித்துள்ளனர். அதனை ஆட்சேபித்து கடந்த 07.09.2010–ல் மதுரை மாநகராட்சி ஆணையாளரிடம் சீராய்வு மனு சமர்ப்பித்தேன். ஆனால் அந்த மனு மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

5) அதாவது ஆரம்பத்தில் மாநகராட்சி தெருக்குறியீடானது கீழ்க்கண்ட வகையில் வகைப்படுத்தப்பட்டிருந்தது.

C1 – முதன்மை வணிக பகுதி – தரம் I C2 – முதன்மை வணிக பகுதி – தரம் II	–	பின்னர் "A" Grade ஆக மாற்றப்பட்டது.
C3 –வணிக பகுதி – தரம் I C4 – வணிகம், குடியிருப்பு கலந்த பகுதி	–	பின்னர் "B" Grade ஆக மாற்றப்பட்டது.
R1 – முதன்மை குடியிருப்பு பகுதி R2 – குடியிருப்பு பகுதி	–	பின்னர் "C" Grade ஆக மாற்றப்பட்டது.
R3 – ஏழை மக்கள் வாழும் பகுதி R4 – சேரிப் பகுதி	–	பின்னர் "D" Grade ஆக மாற்றப்பட்டது.

தெருக்குறியீட்டினை மாற்றி, வரிவிதிப்பு செய்யும்போது, மதுரை மாநகராட்சி சட்டம் பிரிவு 118–ல் சொல்லப்பட்டுள்ள விதிமுறைகளை முழுமையாக பின்பற்றவில்லை. வீட்டு உரிமையாளர் என்ற முறையில் மதுரை மாநகராட்சி எனக்கு முன்அறிவிப்பு செய்து, எனது கருத்தையோ அல்லது ஆட்சேபணையையோ கேட்க வேண்டும்.

மேலும் மக்கள் கூடும் இடங்களிலும், சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலகங்களிலும் தெளிவாக தெரியும் வகையில் அறிவிப்பு பலகையில் அறிவிப்பு செய்ய வேண்டும். பின்னர் கூட்டம் நடத்தி மக்களின் கருத்துக்களை கேட்கவேண்டும். ஆட்சேபணைகள் இருந்தால் அதனை பெற்று பரிசீலனை செய்ய வேண்டும். அதன் பின்னர் முறையாக சம்பந்தப்பட்ட பகுதிகளின் டமாரம் மூலம் ஒலிஎழுப்பி மக்கள் முன்னிலையில் பகிரங்கமாக அறிவிக்கவேண்டும். ஒரு பிரபல ஆங்கில நாளிதழ் மற்றும் இரு தமிழ் நாளிதழ்களிலும் மேற்படி தெருக்குறியீட்டு எண்ணை மாற்றம் செய்து அதன்படி வரிவிதிப்பு செய்யப்போவது குறித்து விளம்பரம் செய்யவேண்டும். மதுரை மாநகராட்சி மேற்படி நடைமுறைகளை முழுமையாக பின்பற்றியபின், இதுசம்மந்தமாக மாநகராட்சி மாமன்றத்தில் முறையான தீர்மானம் நிறைவேற்றி இறுதியாக மதுரை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்தபிறகே தெருக்குறியீடு மாற்றத்தின் அடிப்படையில் வரி உயர்வு நடைமுறைக்கு வரும். ஆனால் மதுரை மாநகராட்சி தரப்பில் மேற்படி விதிமுறைகள் எதையும் பின்பற்றாமல் தன் இஷ்டப்படி தான்தோன்றித்தனமாக தெருக்குறியீட்டு எண்ணை மாற்றி அதன்படி வரிவிதிப்பு செய்தது மதுரை மாநகராட்சி சட்டவிதிகளுக்கு முரணானது, சட்டவிரோதமானது மற்றும் இயற்கை நீதிக்கு எதிரானது.

6) (1) அரசாணை (நிலை) எண்.150, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 12.11.2007.

(2) அரசு கடிதம் எண்.38279/தேர்தல்/2006–2 நாள் 12.11.2007.

(3) அரசாணை (நிலை) எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.07.2018.

(4) அரசாணை (நிலை) எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 26.07.2018.

(5) அரசாணை (நிலை) எண்.52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள் 30.03.2022.

ஆகியவற்றை பார்வையாக கொண்டு அவற்றின் துணையுடன் சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள பின்பற்றப்படவேண்டிய வழிகாட்டுதல்கள் அடங்கிய சுற்றறிக்கையை சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் கடந்த 01.04.2022 –ல் ந.க.எண்.40032/2012/R1–ன்படி வெளியிட்டுள்ளது. அதனையும் அரசாணை நிலை எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை, நாள் 30.03.2022–யும் மேற்கோள்காட்டி மதுரை மாநகராட்சி கடந்த 13.04.2022ல் சொத்து வரி திருத்தம் அறிவிக்கை என்ற பெயரில் தினத்தந்தி நாளிதழில் ஒரு அறிவிப்பு வெளியிட்டுள்ளது. மேற்படி அரசாணை மற்றும் சுற்றறிக்கையிலும் ஏற்றுக் கொண்டு அதனை நடைமுறைப்படுத்தியுள்ளது.

7) மேற்படி அரசாணை மற்றும் சுற்றறிக்கை எல்லாம் நகராட்சிகளுக்கு மட்டுமே பொருந்தும் என்றும் அவை மாநகராட்சிகளுக்கான சொத்து வரி திருத்ததிற்கு பொருந்தாது என்று கூறி வருகின்றனர். ஒரு புறம் மேற்படி அரசாணை மற்றும் சுற்றறிக்கைகளின் அடிப்படையில் வரி சீராய்வு / சொத்து வரி திருத்தம் ஆகியவற்றை மதுரை மாநகராட்சி பின்பற்றிவிட்டு, ஆனால் அவை மாநகராட்சிக்கு பொருந்தாது என சொல்லி வருகிறது.

8) எனது கட்டிடத்திற்கு கடந்த 01.04.2010ல் A Grade-முதன்மை வணிக பகுதி என்ற தெருக்குறியீட்டின் அடிப்படையில் வரி விதிப்பு செய்யப்பட்டு ஒரு அரையாண்டு வரியாக ரூ.13,888/– நிர்ணயிக்கப்பட்டது. பின்னர் கடந்த 01.04.2022ல்

நடத்தப்பட்ட பொது சீராய்வின்படி மேற்படி ஒரு அரையாண்டு வரியான ரூ.13,888/– ஆனது 100% உயர்வு செய்யப்பட்டு ரூ.27,776/– ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

9) எனது கட்டிடத்திற்கு கடந்த 01.04.2010–ல் R2-குடியிருப்பு ("C" Grade) என்ற தெருக் குறியீட்டின் அடிப்படையில் வரி விதிப்பு செய்திருந்தால், ஒரு அரையாண்டு வரியாக ஏற்கனவே விதிக்கப்பட்ட ரூ.13,888/–லிருந்து 1/3 பங்கான ரூ.4,629/– மட்டுமே விதிக்கப்பட்டிருக்கும். அதன்பின் கடந்த 01.04.2022ல் நடத்தப்பட்ட பொது சீராய்வின்படி மேற்படி ஒரு அரையாண்டு வரியான ரூ.4,629/– ஆனது, 100% உயர்வு செய்யப்பட்டு ரூ.9,258/– ஆக நிர்ணயிக்கப்பட்டு, அதிலிருந்து சட்ட விதிகளின்படி எனது கட்டிடத்தின் வயது 12 வருடம் என்பதால், சட்டப்படி அதற்கான கட்டிட கழிவு 10%க்கான தொகை ரூ.926/– கழிக்கப்பட்டு இறுதியாக கடந்த 01.04.2022 முதல் ஒரு அரைவருட வரியாக ரூ.8,332/– மட்டுமே நிர்ணயம் செய்யப்பட்டிருக்கும்.

10) ஆனால் எனது கட்டிடத்திற்கு குடியிருப்புப் பகுதி R2-என ("C" Grade) இருந்ததன்படி, வரி நிர்ணயம் செய்யாமல் முதன்மை வணிக பகுதி "A" என்ற அடிப்படையில் வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், ஒரு அரையாண்டு வரியாக ரூ.18,888/– நிர்ணயமாகி அதிலிருந்து 100% உயர்த்தப்பட்டு எனது கட்டிடத்தின் வயது 12 வருடம் என்பதால், சட்டப்படி அதற்கான கட்டிடக்கழிவு 10% கழிக்கப்படாமல் மொத்தம் ரூ.27,776/–ஐ செலுத்தி வருகின்றேன். அதாவது ஒவ்வொரு அரையாண்டும் ரூ.8,322/–க்கு பதிலாக 01.04.2022ல் நடத்தப்பட்ட பொது சீராய்வின்படி 100% வரி உயர்வு செய்யப்பட்டு ஒரு அரையாண்டு வரியாக ரூ.27,776/– செலுத்தி வருகிறேன். அதாவது ரூ.19,444/– அதிகப்படியாக செலுத்தி வருகிறேன்.

எனவே கடந்த 2010–ல் தெரு குறியீட்டு எண் "C" Grade அடிப்படையில் ஒரு அரை வருட வரியாக ரூ.4629/– நிர்ணயித்து 2022–ல் 100% உயர்வு செய்து 10% கட்டிட கழிவு கொடுத்த பின் ரூ.8,332/–ஐ நிர்ணயம் செய்யுமாறு மதுரை மாநகராட்சிக்கு உத்தரவிடுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் நான் ஏற்கனவே கட்டியுள்ள அதிகப்படியான சொத்து வரியை வருங்காலத்தில் எனது சொத்து வரி கணக்கில் வரவு வைத்துக் கொள்ள மதுரை மாநகராட்சிக்கு உத்தரவிடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.'' என தெரிவித்துள்ளார்கள்.

6. மதுரை மாநகராட்சி மண்டலம் 1 (கிழக்கு)–ன் உதவி வருவாய் அலுவலர் மற்றும் வருவாய் உதவியாளர் ஆகியோர் 29.04.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

''தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் கட்டிட சதுர அடி அளவுகளின்படி ஒரே சீரான வரி விதிப்பை மேற்கொள்ள அரசால் வழி வகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி மதுரை மாநகராட்சி உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைக்குட்பட்ட பகுதியில் அடிப்படை வசதிகள் மற்றும் கட்டமைப்புகளுக்கு ஏற்றவாறு மதுரை மாநகராட்சி பகுதிகள் சொத்து வரி விதிப்பிற்காக மண்டலம் "A", "B" மற்றும் "C" என வகைப்படுத்தப்பட்டுள்ளது என்கிற விபரத்தினை இம்முறை மன்ற நடுவத்திற்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேற்குறிப்பிட்ட உட்கட்டமைப்புபடி நடுவ புகார் மனுதாரர் திரு.C.நாராயணன் அவர்களது வீடு அமைந்துள்ள மதுரை K.புதூர், கற்பக நகர் 10வது தெரு, மண்டலம் ''A" வகைப்பாட்டில் உள்ள இடத்தில் உள்ளது. புகார் மனுதாரர் வீடு மட்டுமல்லாது அத்தெருப்பகுதி முழுவதும் 01.04.2008 முதல் "A" மண்டலத்தில் உள்ளது. அத்தெரு பகுதியில் உள்ள அனைத்து வரி விதிப்புகளுக்கும் 01.04.2008 முதல் "A" மண்டல வகைப்பாட்டின்படி சொத்து வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது.

"A" மண்டலப் பகுதிக்குள் மனுதாரர் வீட்டினை அமைத்துக்கொண்டு "C" வகைப்பாட்டில் இப்புகார்தாரரின் சொத்து வரியை சேர்க்க தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் புகார் அளிப்பதற்கு எவ்வித அடிப்படையிலும் நியாயம் இல்லை என நடுவத்திற்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் மனுதாரர் மாநகராட்சி "A" மண்டல வகைப்பாடு இடத்தில் குடியிருந்து கொண்டு சொத்து வரி விதிப்பை வேறு வகைப்பாட்டிற்கு மாற்ற கோருவதற்கு மாநகராட்சியில் கோரிக்கை விடுத்த மனுவில் மனுதாரர் தரப்பில் எவ்வித முகாந்திரமும் இல்லாததால் மனுதாரர் மாநகராட்சியில் ஏற்கனவே அளித்த மனுவின் மீது நடவடிக்கை இல்லை என்ற விபரம் இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் மனுதாரரின் சொத்துவரி விதிப்புக்குரிய கட்டிட அளவுகள் பின்வருமாறு உபயோகத்தில் உள்ளது.

தரைதளம்	:	1799 சதுர அடி
முதல் தளம்	:	1675 சதுர அடி
இரண்டாம் தளம்	:	371 சதுர அடி
மொத்தம்	:	3845 சதுர அடி ஆக உள்ளது

தற்போது தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் சொத்துவரி பொது சீராய்வு அரசாணை எண்.53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA(IV) துறை நாள் 30.03.2022ன் வழிகாட்டுதல்கள்படி மேற்கொள்ளப்பட்டு சொத்துவரி உயர்வு செய்ய அரசு அறிவுறுத்தியவாறு அனைத்து வரி விதிப்புகளுக்கும், Property Tax Increase Factor அடிப்படையில் சொத்து வரி நிர்ணயம் செய்யப்படுகிறது. மனுதாரரின் வரிவிதிப்புக்குரிய கட்டிட பரப்பளவு மேற்குறிப்பிடப்பட்டுள்ள 3845 சதுரடி Property Tax Increase Factor 2 என்கிற அடிப்படையில் 01.04.2022 முதல் சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கது.

மனுதாரர் கோரிய கட்டிடத்திற்கான 10% கழிவுகள் குறித்து அரசாணை எண்.53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA(IV) துறை நாள் 30.03.2022–ல் ஏதும் குறிப்பிடாததால் மனுதாரரது கட்டிடத்திற்கு 10% கழிவுகள் அனுமதிக்கப்படவில்லை. மேலும், மாமன்ற தீர்மானம் எண் 10 நாள் 12.04.2022–ல் சொத்துவரி உயர்வு செய்ய அனுமதி வழங்கி தீர்மானித்துள்ளது. அதன்படி ஆணையாளர் அவர்களிடம் வழங்கப்பட்ட 6 ஆட்சேபணை மனுக்கள் பெறப்பட்டு, பரிசீலனை செய்து முடிவு எடுக்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில் மாமன்றம் தனது தீர்மானம் எண் 33 நாள் 23.06.2022 அன்று 01.04.2022 முதல் மண்டல அடிப்படையில் சொத்துவரி உயர்வு செய்ய ஊர்ஜிதம் செய்யப்பட்டு மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்டது என்ற விவரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக சுற்றறிக்கை ந.க. எண் 40032/2012/ஆர்1 நாள் 01.04.2022–ன்படி, சொத்துவரி கழிவு என்பது நகராட்சிக்கு மட்டுமே பொருந்தும். மாநகராட்சிக்கு பொருந்தாது. மனுதாரர் கோரிக்கையான சொத்து வரி விதிப்பினை மண்டல "A"–பிரிவிலிருந்து "C" பிரிவு வகைப்பாட்டிற்கு மாறுதல் செய்திட சட்டப்படி வழிவகை இல்லை என்ற விவரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மதுரை மாநகராட்சி கற்பக நகர் 10 வது தெருவில் உள்ள மற்ற வீடுகளின் சொத்து வரி உதாரணமாக வரி விதிப்பு எண் 115/010/906115, 115/010/906800, 115/010/919035 மற்றும் 115/010/919147 ஆகியவற்றிக்கு A பிரிவின் வகைப்பாட்டின் அடிப்படையில் சொத்து வரி விதிக்கப்பட்டுள்ளது. அதன் நகல்களை மாண்புமிகு இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கிறோம்." எனத் தெரிவித்துள்ளார்கள்

7. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் மனுதாரரது சார்பாக விசாரணைக்கு ஆஜரான திரு. A. சபபாலமுருகன் அவர்கள் அளித்த வாக்குமூலம், மதுரை மாநகராட்சி மண்டலம் 1 (கிழக்கு) உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி வருவாய்

அலுவலர் மற்றும் வருவாய் உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

"மதுரை மாநகராட்சி பழைய மண்டலம் எண்.2 புதிய மண்டலம் 1 பழைய வார்டு எண்.4 புதிய வார்டு எண்.10, கற்பக நகர் 10வது தெரு, பிளாட் எண்.259, கட்டிடத்திற்கு 01.04.2010 முதல் ரூ.1,498/–லிருந்து ரூ 13,888/– என வரி விதிப்பு எண்.343047ன் பிரகாரம் மண்டலம் A பிரிவில் வரி விதிப்பு செய்யப்பட்டது எனவும், மேற்கண்ட வரிவிதிப்பை ஆட்சேபித்து 07.09.2010–ல் சீராய்வு மனுவும், 01.04.2022–ல் பொது சீராய்வு அறிவிக்கையை ஆட்சேபித்து 17.07.2022–லும் மாநகராட்சியிடம் சீராய்வு மனு சமர்ப்பித்ததாகவும், ஆனால் தன்னுடைய மனுக்களின் மீது நடவடிக்கை எடுக்காததால், மதுரை மாநகராட்சி சொத்துவரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் மேல் முறையீட்டு வழக்கை சமர்ப்பித்தாகவும், 01.04.2008 பொது சீராய்வில் திருத்தப்பட்ட மாத வாடகை மற்றும் தெருக்குறியீடுகள் சம்பந்தமாக 1971–ம் வருடத்திய மதுரை மாநகராட்சி சட்டப்பிரிவு 118–ன் பிரகாரம் மதுரை மாவட்ட அரசிதழில் பிரசுரிக்கப்படாததால் 01.04.2010–ல் விதிக்கப்பட்ட வரி சட்டப்படி செல்லத்தக்கதல்ல எனவும், மனுதாரரின் குடியிருப்பு பகுதி (R2) என இருந்ததை 01.04.2008 பொது சீராய்வில் முதன்மை வணிக பகுதி "A" என மாற்றம் செய்ததற்கு எந்தவித விளக்கமோ, முகாந்திரமோ தெரிவிக்கப்படவில்லை எனவும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை எண்.53, நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/R1, நாள் 01.04.2022–ன் பிரகாரம் பொது சீராய்வு நடத்துவதற்கு மாமன்ற தீர்மானம் எண்.10, நாள் 12.04.2022–ன் பிரகாரம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதன்படி 01.04.2022–ல் பொது சீராய்வில் தன்னுடைய கட்டிடத்திற்கு கட்டிடக் கழிவு வழங்கப்படவில்லை எனவும், எனவே தன்னுடைய மனுவை பரிசீலனை செய்து, 01.04.2010–ல் முதன்மை வணிக பகுதி என மண்டலம் "A" விகிதத்தில் வரி விதிப்பு செய்திருப்பதை குடியிருப்பு பகுதி மண்டலம் "C" விகிதத்தில் மாற்றம் செய்தும், 01.04.2022 பொது சீராய்வில் அரசாணை மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக சுற்றறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் 10% கட்டிட கழிவு வழங்க உத்தரவு பிறப்பிக்குமாறு, கோரியிருப்பது, மனுதாரரின் முறையீட்டு மனு மற்றும் வாக்குமூலங்களிலிருந்து அறிய முடிகிறது.

மனுதாரர் திரு.C.நாராயணன் என்பவரது வீடு அமைந்துள்ள மதுரை K.புதூர், கற்பக நகர் 10வது தெரு, மண்டலம் "A" வகைப்பாட்டில் உள்ள இடத்தில் உள்ளது என்றும், மனுதாரர் வீடு மட்டுமல்லாது அத்தெருப்பகுதி முழுவதும் 01.04.2008 முதல் A மண்டலத்தில் உள்ளது எனவும், அத்தெருப் பகுதியில் உள்ள அனைத்து வரி விதிப்புகளுக்கும் 01.04.2008 முதல் "A" மண்டல வகைப்பாட்டின்படி சொத்து வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது எனவும், மனுதாரரின் சொத்துவரி விதிப்புக்குரிய கட்டிடத்தின் மொத்த பரப்பளவு 3845 சதுர அடி எனவும், தற்போது தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் சொத்துவரி பொது சீராய்வு அரசாணை எண்.53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA(IV) துறை நாள் 30.03.2022–ன் வழிகாட்டுதல்கள்படி மேற்கொள்ளப்பட்டு சொத்துவரி உயர்வு செய்ய அரசு அறிவுறுத்தியவாறு அனைத்து வரி விதிப்புகளுக்கும், Property Tax Increase Factor அடிப்படையில் சொத்து வரி நிர்ணயம் செய்யப்படுகிறது எனவும், மனுதாரரின் வரிவிதிப்புக்குரிய கட்டிட பரப்பளவு 3845 சதுரடி Property Tax Increase Factor 2 என்கிற அடிப்படையில் 01.04.2022 முதல் சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது எனவும், மனுதாரர் கோரிய கட்டிடத்திற்கான 10% கழிவுகள் குறித்து மேற்கண்ட அரசாணையில் ஏதும் குறிப்பிடாததால் மனுதாரரது கட்டிடத்திற்கு 10% கழிவுகள் அனுமதிக்கப்படவில்லை எனவும், மேலும், மாமன்ற தீர்மானம் எண் 10 நாள் 12.04.2022–ல் சொத்துவரி உயர்வு செய்ய அனுமதி வழங்கி தீர்மானித்துள்ளது எனவும், அதன்படி மாநகராட்சி ஆணையாளரிடம் வழங்கப்பட்ட 6 ஆட்சேபணை மனுக்கள் பெறப்பட்டு, பரிசீலனை செய்து, மாமன்றம் தனது தீர்மானம் எண் 33 நாள் 23.06.2022

அன்று, 01.04.2022 முதல் மண்டல அடிப்படையில் சொத்துவரி உயர்வு செய்ய ஊர்ஜிதம் செய்யப்பட்டு மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்டது எனவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக சுற்றறிக்கை ந.க. எண் 40032/2012/ஆர்1 நாள் 01.04.2022–ன்படி, சொத்துவரி கழிவு என்பது நகராட்சிக்கு மட்டுமே பொருந்தும் எனவும், மாநகராட்சிக்கு பொருந்தாது எனவும், மனுதாரர் கோரிக்கையான சொத்து வரி விதிப்பினை மண்டல "A"–பிரிவிலிருந்து "C" பிரிவு வகைப்பாட்டிற்கு மாறுதல் செய்திட சட்டப்படி வழிவகை இல்லை எனவும், மதுரை மாநகராட்சி கற்பக நகர் 10 வது தெருவில் உள்ள மற்ற வீடுகளுக்கு வரி "A" பிரிவின் வகைப்பாட்டின் அடிப்படையில் சொத்து வரி விதிக்கப்பட்டுள்ளது என்பதும் மதுரை மாநகராட்சி மண்டலம் 1 (கிழக்கு)–ன் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி வருவாய் அலுவலர் மற்றும் வருவாய் உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவற்றின் மூலம் அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர், மதுரை மாநகராட்சி, பழைய மண்டலம் எண்.2 புதிய மண்டலம் 1 பழைய வார்டு எண்.4 புதிய வார்டு எண்.10, கற்பக நகர் 10வது தெரு, பிளாட் எண்.259, கட்டிடத்திற்கு வரைபட அனுமதி எண் NE4/01580/08, உரிமை ஆணை எண் 8108 நாள் 21.02.2008–ன் பிரகாரம் வரைபட அனுமதி பெற்று கட்டப்பட்ட கட்டிடத்திற்கு 01.04.2010 முதல் ரூ.1498/– லிருந்து ரூ.13,888/– என வரி விதிப்பு எண் 343047–ன் பிரகாரம் மண்டலம் "A" பிரிவில் வரி விதிப்பு செய்யப்பட்ட கணக்கீடே தவறாகும் என்றும், மனுதாரரது கட்டிடம் அமைந்துள்ள பகுதி முதன்மை வணிகப் பகுதி "A" என்பதற்கான எந்த அடிப்படை காரணமும் இல்லை எனத் தெரிவித்து மதுரை மாநகராட்சி சட்டத்தை மீறி குடியிருப்புப் பகுதி "R2" என இருந்ததை மாற்றி வணிகப் பகுதி "A" என அதிகாரிகளே முடிவு செய்து அதன்படி வரி விதித்துள்ளனர் என்றும், ஆனால் மனுதாரரது கட்டிடத்தில் கடந்த 01.04.2010–ல் "R2" குடியிருப்பு (C grade) என்ற தெருக்குறியீட்டின் அடிப்படையில் வரி விதிப்பு செய்திருந்தால், ஒரு அரையாண்டு வரியாக ஏற்கனவே விதிக்கப்பட்ட ரூ.13,888/– லிருந்து 1/3 பங்காக ரூ.4,629/– மட்டுமே விதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது அறிய முடிகிறது.

மேற்கண்ட விவரங்களின்படி மனுதாரரின் கோரிக்கை 2010–ம் வருடத்தினை சார்ந்தது என்பதால் 2014–ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10 (3) (C)–ன்படி ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட பொருட்பாடு குறித்து இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என வரையறுக்கப்பட்டுள்ளது.

<u>Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014</u>:-

Section 10(3) The Ombudsman shall not enquire into matters relating to-

(a) Xxxx
(b) Xxxx
(c) any complaint filed after the expiry of five years from the date on which the occurance is said to have taken place

எனவே, மனுதாரரின் மேற்கண்ட கோரிக்கை மீதான மேல்நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்று இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும், மனுதாரர் கோரிய கட்டிடங்களுக்கான 10 சதவீத கழிவுகள் குறித்து, அரசின் கொள்கை முடிவின்படி வெளியிடப்பட்ட அரசாணை எண் 53 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை நாள் 30.03.2022–ல் ஏதும் குறிப்பிடவில்லை என்பதும், அதனால் கட்டிட கழிவுகள் வழங்கப்படவில்லை என்பதும் மதுரை மாநகராட்சி மண்டலம் 1–ன் உதவி ஆணையரின்

அறிக்கை மற்றும் உதவி வருவாய் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக அறியப்படுவதால், மேற்கண்ட மனுதாரரின் கோரிக்கை மீது மேல்நடவடிக்கை எடுக்க அவசியம் எழவில்லை என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 12–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. C.நாராயணன்,
எண் 259, கற்பக நகர், 10வது தெரு,
K. புதூர், மதுரை–625 007.

2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

3) உதவி ஆணையர்,
மண்டலம் 1 (கிழக்கு),
மதுரை மாநகராட்சி,
ஆனையூர், மதுரை–625 002.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

5) இணை இயக்குநர்/
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

16/6/25

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032